17.10.2018

## பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் விளையாட்டு விடுதி/விளையாட்டுப் பள்ளி மாணவ மாணவியர்களுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கம், மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம், வேளச்சேரி நீச்சல் குள வளாகம் ஆகிய இடங்களில் 14 விளையாட்டுகளுக்கு 13.10.2018 முதல் 15.10.2018 வரை போட்டிகள் நடைபெற்றது. இதில் தடகளம், கூடைப்பந்து, இறகுப்பந்து, குத்துச்சண்டை, கிரிக்கெட், ஜிம்னேஸ்ட்டிக்ஸ், கால்பந்து, வளைகோல் பந்து, வாள் சண்டை, நீச்சல், டேக்வாண்டோ, கைப்பந்து, கையுந்து பந்து மற்றும் பளுதூக்குதல் ஆகிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அரசால் நடத்தப்படும் 27 விளையாட்டு விடுதி மற்றும் விளையாட்டுப் பள்ளியை சேர்ந்த 2000க்கும் மேற்பட்ட மாணவ/மாணவிகள் கலந்துக் கொண்டனர்.

இப்போட்டியின் நிறைவு விழாவில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் விழாவில் தலைமையேற்று பேசுகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சிறந்த விளையாட்டு வீரர் வீராங்கனைகளை ஊக்குவிப்பதற்கு, சிறந்த கட்டமைப்பு வசதிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அனைத்து விதமான விளையாட்டுகளுக்கும் பயிற்றுநர்களை வைத்து பயிற்சி அளிக்கப்படுகிறது. 27 மாவட்டங்களில் உள்ள விளையாட்டு விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ மாணவியர்கள் மாநில அளவிலான நடத்தப்பட்ட போட்டிகளில் பங்கேற்று கோப்பைகள் பெற உள்ளீர்கள். உங்களுடைய திறமையை மேம்படுத்துவதற்கும் தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கும் முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் வந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து பல சிறப்பான திட்டங்களை வகுத்து செயல்ப்படுத்தி வருகிறார்கள். விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக், ஆசிய போட்டிகள், காமன் வெல்த் போட்டிகளில் கலந்துக் கொண்டு பதக்கம் வெல்வதற்கு தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித் தொகை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தலைச்சிறந்த மற்றும் பெண் விளையாட்டு வீரர்களின் செயல்திறனை மதிப்பிடுதல் மற்றும் கால முறையில் கண்காணித்தல் அல்ல ஊட்டுச்சத்து வழங்குதல் போன்று செயல்திறனை மேம்படுத்துவதற்கான திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. அது போல மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள், வெற்றியாளர் மேம்பாட்டு திட்டம் போன்று பல வகையான சிறப்பு திட்டங்கள் விளையாட்டு வீரர் வீராங்கனைகள். இந்த வாய்ப்பையெல்லாம் நல்ல முறையில் பயன்படுத்தி சிறந்த விளையாட்டு வீரர்களாக உருவாகி நாட்டிற்கும் குடும்பத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்றுக் கேட்டுக் கொண்டார் வெற்றி பெற்ற வீரர்/வீராங்கனைகளுக்கு பரிசு கோப்பையும் சான்றிதழ் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் திரு. தீரஜ் குமார், இ.ஆ.ப மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், இ.ஆ.ப. ஆகியோர் விழாவில் கலந்துக் கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணை பொது மேலாளர் திருமதி. R. கீதாஞ்சலி ரத்னமாலா அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள். விளையாட்டு மேம்பாட்டு ஆணைய முதுநிலை மேலாளர் திரு.K.புகழேந்தி அவர்கள் நன்றியுரையாற்றினார்.

**வெளியீடு : தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்.**